# 93 லட்சம் பேர் மெட்ரோ பயணம்

சென்னை, ஏப். 2–

கொரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பின், சென்னை மெட்ரோ ரயிலில், 93.68 லட்சம் பேர் பயணித்துள்ளனர்.

சென்னையில், மெட்ரோ ரயில் போக்குவரத்து, கொரோனா ஊரடங்குக்கு பின், 2020 செப்., 7 ம் தேதி முதல், மீண்டும் துவங்கப்பட்டது. இந்த ரயிலில், கடந்த ஆண்டு செப்., 7 முதல், 2020 டிச.,31 வரை, 31.52 லட்சம் பேர் பயணித்தனர்.

இந்நிலையில், இந்த ஆண்டு, ஜன.,1 முதல், மார்ச், 31 வரை, 62.16 லட்சம் பேர் பயணித்துள்ளதாக, மெட்ரோ நிர்வாகம் அறிவித்துள்ளது.

ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்பட்ட பின், மெட்ரோ ரயிலில் மொத்தம் 93.68 பேர் பயணம் செய்துள்ளனர்.